

நீலகிரி மாவட்டம், குன்னூர் மவுண்ட் பிளசண்ட் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.15 லட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக் கடை கட்டுவதற்கான பணியினை கழக துணை பொது செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா, மாவட்ட கழகச் செயலாளர் பா.மு.முபாரக் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

## நாமக்கல் - அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியில்

# ரூ.4.70 இலட்சம் மதிப்பீட்டில் 8 குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. துவக்கி வைத்தார்!

நாமக்கல், அக். 6 -

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் பாராளு மன்ற மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.4.70 லட்சம் மதிப் பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 8 குடிநீர் சுத்திகரிப்பு இயந் திரங்களின் செயல்பாட் டினை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செய லாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் தொடங்கி வைத் தார்.

இந்நிகழ்ச்சியில் நாமக் கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பி னருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தெரி வித்ததாவது:-

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் சுமார் 3,000 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

மேலும் இக்கல்லூரி யில் பேராசிரியர்கள், பணியாளர்கள் 200 க்கும் மேற்பட்டவர்கள் பணி யாற்றி வருகின்றனர். ஆக மொத்தம் 3,200 மேற் பட்ட மாணவ, மாணவி யர்கள், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்க ளுக்கு சுத்திகரிக்கப்பட்ட சுகாதாரமான குடிநீர் வழங்கும் பொருட்டு, கல் லூரி வளாகத்திலுள்ள முதன்மை கட்டடம், வேதியியல் துறை, தாவர வியல் துறை, இயற்பியல் துறை, கணிதம் மற்றும் கணினி அறிவியல் துறை, நூலகம் மற்றும் சிற் றுண்டி கூடம் ஆகிய 8 இடங்களில் பாராளு மன்ற மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.4.70 இலட்சம் மதிப் பீட்டில் 8 குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங் கள் அமைக்கப்பட் டுள்ளன.

இந்த இயந்திரங்கள் 1 மணி நேரத்திற்கு 100 லிட்டர் சுத்திகரிக்கும் திறன் கொண்டதாகும். மேலும் குளிர்படுத்தப் பட்ட குடிநீர் வழங்கும் வசதியும் கொண்டதா கும்.

இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட் டுள்ள 8 குடிநீர் சுத்தி கரிப்பு இயந்திரங்களை மாணவ, மாணவியர்கள் நல்ல முறையில் பயன்ப டுத்திக் கொள்ள வேண் டும். மேலும், எதிர்காலத் தில் இக்கல்லூரியில் பயில வரும் மாணவ, மாணவி யர்களுக்கும் பயன்படு கிற வகையில் பாதுகாப்பு டன் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் எம்.பி. தெரிவித் தார்.

இந்நிகழ்ச்சியில் அறி ஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி முதல்வர் முனைவர் ராஜா, மோக னூர் ஒன்றிய கழகச் செய லாளர் பெ.நவலடி, உள் ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சொத்துவரியை

### அக். 30க்குள் செலுத்த வேண்டும்!

சென்னை, அக். 6 –

பெருநகர சென்னை மாநகராட் சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சொத்து உரிமையாளர்கள் முதல் அரையாண்டுக்கான சொத்து வரி யினை ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30 வரையிலும், இரண்டாம் அரை யாண்டுக்கான சொத்துவரியினை அக்டோபர் 1 முதல் மார்ச் 31 வரை யிலும் செலுத்த வேண்டும்.

மேலும், முதல் அரையாண்டு சொத்துவரியினை ஏப்ரல் 30ஆம் தேதிக்குள்ளாகவும், இரண்டாம் அரையாண்டு சொத்துவரியினை அக்டோபர் 30ஆம் தேதிக்குள்ளாக வும் செலுத்தும் சொத்து உரிமையா ளர்களுக்கு பெருநகர சென்னை மாந கராட்சியின் சார்பில் 5 சதவீத ஊக்கத்தொகை அதிகபட்சம் ரூ.5 ஆயிரம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, பெருநகர சென்னை மாந கராட்சிக்குட்பட்ட சொத்து உரிமை யாளர்கள் இரண்டாம் அரையாண் டுக்கான சொத்துவரி யினை அக்டோபர் மாதம் 30ஆம் தேதிக் குள் செலுத்தி, 5 சதவீத ஊக்கத் தொகை அதிகபட்சம் ரூ.5 ஆயிரம் வரை பெற்று பயனடையுமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கு மாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநிலத் தலைவராகத் தேர்வு

# பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீனுக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!



சென்னை, அக் 05-

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி யின் மாநிலத் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள பேராசிரியர் கே.எம்.காதர் மொகி தீன் அவர்களுக்கு முதலமைச்சரும் - கழகத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், தனது சமூக வலைதளப் பக்கத்தில் வாழ்த்துத் தெரிவித்து பதிவிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் களின் வாழ்த்து செய்தி வருமாறு:

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநிலத் தலைவராகத் தேர்ந்தெ டுக்கப்பட்டுள்ள பேராசி ரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்க ளுக்கு எனது மன மார்ந்த வாழ்த்துக ளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆழ்ந்த கல்விப்புலமையும், நெடிய அனுபவமும் கொண்ட அவ ரது அரசியல் பணி மேலும் சிறக்க வும்; வெற்றிகள் பெறவும் வாழ்த்து கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.




தருமபுரி கிழக்கு மாவட்டம் பாப்பரப்பட்டியில் உள்ள விடுதலை போராட்ட வீரர் தியாகி சுப்ரமணிய சிவா மணிமண்டபத்தில் அவரது 140 ஆவது பிறந்தநாளையொட்டி மாவட்ட நிர்வாகம் சார்பில் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர் திருமதி.டி.ஆர்.கீதா ராணி,சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி,எஸ்.பி.வெங்கடேஸ்வரன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணி ஆகியோர் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினர். உடன் மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

